ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

ஸ்ரீ வைணவதினசரி

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீ வைணவதினசரி

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

‡ வரி இருள் அழி வழி ⋆
மனம் வரும் உணர்வொடு ⋆
கரிகிரி மருவிய ⋆
கரியவன் அடி இணை ⋆⋆
பரிவொடு பரவு நல் ⋆
அடியவர் பழ உரை ⋆
அரி அரி அரி அரி ⋆
அரி அரி அரியே ॥ **1** ॥

வினை வகை ஒழுகிய ⋆
வெறி நிலை அடையவும் ⋆
நினைவுடை நிகழ்வெதிர் ⋆
நிலை நலம் அணுகிட ⋆⋆
மனம் உரை கிரிசைகள் ⋆
மகிழ் மறை நெறி கொடு ⋆
தனி முதல் அடி இணை ⋆
அடைபவர் தமரே ॥ **2** ॥

மலர் மகள் மருவிய ⋆
மறு உடை இறையவன் ⋆
மலர் அடி கருதிய ⋆
மனமுடை அடியவர் ⋆⋆
மலர் புனல் அமுதுடன் ⋆
வகையன அடையவும் ⋆
மலர் மதி எமதல ⋆
என அறிபவரே ॥ **3** ॥

நிறை உடை மலர் மகள் ⋆
நலம் உற மருவிய ⋆
இறையவன் இனிதுற ⋆
இனியவை எணும் அவர் ⋆⋆
அறநெறி இலன் எவன் ⋆
அணுகிலும் அணுகிலர் ⋆
துறை அலதெனும் ஒரு ⋆
துறை படுகிலரே ॥ **4** ॥

ஒளி மதி என ஒரு ⋆
திருவுடன் உயர்பவன் ⋆
நளி மதி முக நகை ⋆
நல நிலவுகவுகள் ⋆⋆
தெளி புனல் அமுதெனச் ⋆
செழு மதி அடியவர் ⋆
குளி முதல் கிரிசைகள் ⋆
குறைகிலர் வலவே ॥ **5** ॥

வருவதொருறவென ⋆
வளர் இளவரசென ⋆
மருவுநன் மகன் என ⋆
வனமத கரி என ⋆⋆
அரு விலை மணி என ⋆
அடியவர் அடைபவர் ⋆
அருகணை இறைவனை ⋆
அரு கணையுடனே ॥ **6** ॥

விரை கமழ் மலர் மகள் ⋆
மிக உறும் இறையவன் ⋆
குரை கழல் குறுகிய ⋆
குளிர் மதி மதியொடு ⋆⋆
வரை நிலை அடியவர் ⋆
மறைகளின் மறை எணும் ⋆
உரை நிரை பரவுவர் ⋆
உளம் அமுதுணவே ॥ **7** ॥

துதிகளும் அறிவரு ⋆
சுருதியின் இறுதியின் ⋆
இதயம் இதென முனி ⋆
இறையவர் உரைகளும் ⋆⋆
மதுர மன் உதவிய ⋆
மறைகளும் அடியவர் ⋆
விதி வகை பரவுவர் ⋆
மிக உளம் எழவே ॥ **8** ॥

‡ அறிவிலர் தலைமிசை ⋆
அயன் அடி எழுதிய ⋆
பொறி வகை எழுவதோர் ⋆
பொறி நலம் உகவலர் ⋆⋆
உறுவதும் உடையதும் ⋆
இதுவென வருவது ⋆
நறு மலர் மகள் பதி ⋆
நலம் உறு நினைவே ॥ **9** ॥

‡ பெருகிய நல நிலை ⋆
பெருமையின் மிகு மயல் ⋆
உருகிய நிலை மனம் ⋆
உயர் முகிழ் எழும் உடல் ⋆⋆
சொருகிய விழி திகழ் ⋆
சுடர் மதி புகும் இறை ⋆
கருகிய உரு திகழ் ⋆
கரிகிரி அரியே ॥ **10** ॥

அடிவரவு — வரி வினை மலர் நிறை ஒளி வருவது விரை துதிகளும் அறிவிலர் பெருகிய ஈரு

ஸ்ரீ வைணவதினசரி முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்